**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.8/2019**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகேந்திரன் | ஜாதி | : | |
| த.பெ | : | மருதராஜ் | தொழில் | : | ஓய்வு, இந்திய ராணுவம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 48/2026 |
| தேதி | : | 17.02.2026 | | | |

முதல் **விசாரணை**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். பின்வரும் ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

1. 16.11.2016 தேதியிட்ட நாகேந்திரனுக்கு கிரையம் எழுதிக்கொடுத்த 1962/2016 எண்ணுடைய ஆவணம் கணினி வழி சான்றிட்ட நகல் **(பி.வா.சா.ஆ.1/ DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 26.08.1991 தேதியிட்ட முத்துச்சாமி மற்றும் குடும்பத்தினர் சரவணனுக்கு கிரையம் எழுதிக்கொடுத்த 721/1991 எண்ணுடைய ஆவணம் கணினி வழி சான்றிட்ட நகல் **(பி.வா.சா.ஆ.2/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 27.01.1997 தேதியிட்ட M. மொட்டையாண்டி என்பவர் கிரையம் எழுதிக்கொடுத்த 78/1997 எண்ணுடைய ஆவணம் கணினி வழி சான்றிட்ட நகல் **(பி.வா.சா.ஆ.3/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் இந்த வழக்கு சொத்தின் சர்வே எண்ணுடன் தொடர்பு இல்லாத ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தை குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு பி.வா.சா.ஆ.3 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

4. பிரதிவாதி பெயரில் சர்வே எண்.1339/5A2 நிலத்திற்காண பட்டா எண்.6757 கணினி வழி பட்டா நகல் **(பி.வா.சா.ஆ.4/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பிரதிவாதி பெயரில் சர்வே எண்.1340/4 நிலத்திற்காண பட்டா எண்.7819 கணினி வழி பட்டா நகல் **(பி.வா.சா.ஆ.5/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 23.08.2022 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அவருடைய அறிக்கை **(நீ.ம.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 23.08.2022 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த வரைபடம் **(நீ.ம.சா.ஆ.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 23.08.2022 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த சர்வேயர் வரைபடம் **(நீ.ம.சா.ஆ.3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor